# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 80/2018**

**Deposition of Witness for PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குமார்ராஜா | Caste | : | |
| Father/Husband Name | : | நல்லதம்பி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.03.2026**

**முதல் விசாரணை** :

நான் தற்போது செக்காணூரணி காவல் நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் டி.இராமநாதபுரம் காவல்நிலையத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தேன். கடந்த04.04.2017ம் தேதி சுமார் 16.00 மணியளவில் நிலைய பதிவேடுகளை சரிபார்த்து கொண்டிருந்தேன்.பின்னர் பெயர் விலாசம் தெரிந்த செல்லையாபுரத்தை சேர்ந்த சின்ன அழகன் மகன் முருகன் என்பவர் நிலையம் வந்து தனது உறவினரான கடவுள் மகன் தங்கபாண்டி என்பவர் காவல் நிலையத்தில் நிபந்தனை ஜாமீனில் கையெழுத்து போட்டு வருகிறார் என்றும், இரண்டு நாட்கள் அவருக்கு முக்கியமான வேலை இருக்கிறது என்றும், இதுசம்பந்தமாக விலக்கு அளிக்க வேண்டும் என்னிடம் கேட்டார். நான் இது நீதிமன்ற உத்தரவு என்பதால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னேன். இதை கேட்ட மேற்படி நபர் நிலையத்திற்கு வேலை சென்று நிலையத்தின் முன்பு நின்று கொண்டு ஏண்டா போலீஸ்கார தேவடியா மகன்களா நீங்கயெல்லாம் என்னடா

வேலை பார்க்கிறீர்கள் உங்களை மாதிரி கேவலமாக நான் ராணுவத்தில் வேலை பார்க்களடா என்று சத்தம் போட்டார். நான் வெளியே சென்று அவரை கண்டித்தேன். அப்போது என்னை பார்த்து நீ ஏண்டா சொல்லுற என்று மீண்டும் மீண்டும் அசிங்கமாக பேசினார். எனக்கு வேலை இருக்கிறது இந்த இடத்தை விட்டு நீங்கள் போகுமாறு அவரிடம் சொன்னேன். நீயெல்லாம் ஏண்டா வேலை பாக்குற கடமையில் எங்களை விட நீ பெரியாள என்று பேசினார். அப்போது பணியில் இருந்த நிலைய பாரா தலைமை காவலர் சுகுமாறன் மற்றும் கணினி பணியில் இருந்த முதல்நிலை காவலர் 1671 குழந்தை வேல் அவர்களும் வந்து எதிரியை பார்த்து அசிங்கமாக பேசாதீங்க இராணுவகாரர் மாதிரி நடந்துகொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு மேற்படி முருகன் எங்களை பார்த்து வாங்கடா அவுசாரி பயலுங்களா நீ போலீஸ்காரர்கள் தான நீங்க இந்த மிலிட்டரிகாரனை பிடிச்சுபாருங்கள் என்று சொல்லி அருகில் கட்டிட வேலை பார்த்த இடத்தில் இருந்த சென்ட்ரீங் கம்பியை எடுத்து என்னை தொட்டால் உங்களை கொல்லாமல்விடமாட்டேன் என்று எங்களை மிரட்டினார். நாங்கள் அவரை பிடிக்க சென்ற போது மேற்படி கம்பியை தூக்கி எறிந்துவிட்டு அங்கிருந்து அவர் ஓடிவிட்டார். பின்னர் என்னை அசிங்கமான பேசியும் அரசு பணியை செய்யவிடாமலும் கொலை மிரட்டல்விடுத்த மேற்படி நபரின் மீது மேற்படி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி சம்பவ நடந்த சமயத்திலும் தற்போது இராணுவத்தில் பணிபுரிந்து வருகிறார் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால்

தெரிந்துகொண்டேன். தற்போது மத்திய உள்துறை அமைச்சகத்தில் பட்ஜெட் எழுத்தராக பணிபுரிந்து வருகிறார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் நான் தான் புகார்தாரர் ஆவேன். நான் புகாரை சார்பு ஆய்வாளர் குபேந்திரன் அவர்களிடம் கொடுத்தேன். எனது புகாரில் எதிரி தனது ஊரைச் சேர்ந்த கடவுள் மகன் தங்கபாண்டி என்பவருக்காக பேசினார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது புகாரில் காவல் நிலையத்தில் ஆஜராகி நீதிமன்ற உத்தரவின்படி ஜாமீன் கையெழுத்து போட்டு வருவதற்காகவும் இரண்டு நாட்கள் கையெழுத்து போட வரமாட்டார் நீங்கள் தான் அனுசரித்து விலக்கு அளிக்க வேண்டும் என்று எதிரி கேட்டதாக எனது புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றம் தான் விலகு அளிக்க வேண்டும் என்று நான் எதிரியிடம் சொன்னவுடனே எதிரியானவர் காவல் நிலையத்தை விட்டு வெளியேறினார் என்றால் சரிதான். எதிரி காவல்நிலையத்தில் இருந்து வெளியே வந்ததாகவும் அல்லது எதிரி காவல்நிலையத்தின் உள்ளே இருந்ததாகவோ எனது புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.எனது காவல் நிலையத்திற்கு மேற்குபக்கம் டி.இராமநாதபுரத்திலிருந்து மேலதிருமணிக்கம் செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மெயின்சாலையில் இருந்து காவல் நிலையம் செல்ல 200 அடி தூரம் என்றால் சரிதான். சம்பவ இடம் காவல் நிலையத்திற்கு உள்ளே என்றால் சரிதானா என்றால் சரியல்ல. சம்பவ இடமானது காவல் நிலையத்திலிருந்து சுமார் 50 மீட்டர் தூரத்தில் நடந்தது. சம்பவ இடம் மேற்கு பக்கமும் கிழக்கு பக்கமும் யாருமே இல்லாத தனியார் நிலம் என்றால் சரியல்ல. ரோட்டிற்கு வடக்கு பக்கமும் தென்பக்கமும் உள்ள இடங்கள் காவல்நிலையத்திற்கு சொந்தமான காலியிடம் என்றால் சரிதான். எனது புகாரிலும் எனது வாக்கு

வாக்குமூலத்திலும் நீ என்னடா வேலை பாக்குற நீயெல்லாம் எங்களை காட்டிலும் கடமையில் பெரியாள என்று சத்தம் போட்டார் என்று சொன்னதற்கு தான் எங்களை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார் என்று எனது புகாரிலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்ன காரணத்தின் அடிப்படையில் எதிரி வேலை செய்ய விடாமல் தடுத்தார் என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் எதிரி காவல் நிலையத்தில் வந்து தனக்கு தெரிந்தவர் ஜாமீன் கையெழுத்து இரண்டு நாட்கள் போட முடியாது என்று கூறியதற்கு நான் அப்படி செய்ய முடியாது என்று சொன்ன பின்பும் எதிரி வெளியே சென்று காவல் நிலையத்திற்கு முன்பு சத்தம் போட்டு கொண்டிருந்தார். நான் வெளியே சென்று எனக்கு வேலை உள்ளது என்றும், அதனால் தொந்தரவு செய்யாமல் அவரை போக சொன்ன பின்பும் எதிரி தொடர்ந்து சத்தம் போட்டதால் அவ்வாறு அவர் அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார் என்று புகார் கொடுத்தேன். எதிரி சத்தம் போடுவதாக சொல்லும் போது நான் காவல் நிலையத்தில் உள்ளே இருந்தேன் என்றால் சரிதான். நான் தான் காவல் நிலையத்திற்கு வெளியே சென்று எதிரியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டேன் என்றால் சரியல்ல. எனது புகாரில் நான் தான் காவல்நிலையத்தில் இருந்து வெளியேறி வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்திற்கு பிறகு தான் மேற்படி தலைமை காவலர் முதல்நிலை காவலர் ஆகியோர் வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி காவலர்கள் வரும்பொழுது எதிரி அங்கிருந்தாரா என்றால் இருந்தார். எனது புகாரில் மேற்படி இரண்டு காவலர்கள் வருவதற்குள் எதிரி என்னை திட்டிவிட்டு ஓடிவிட்டார் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். எதிரியை பிடிக்க மூன்று காவலர்களும் சென்றோம்

என்றால் மூன்று பேரும் சென்றோம், ஆனால் பிடிக்க முடியவில்லை. மேற்படி தகவலை எனது புகாரிலோ வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி ஓடிபின்பு நானும் இரண்டும் காவலர்கள் மட்டும் தான் காவல் நிலையத்தில் இருந்தோம் என்றால் சரிதான். எதிரி மீது வேறு எந்த குற்ற வழக்கும் எங்கள் காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ளதா என்றால் தெரியாது. நான் மேற்படி காவல் நிலையத்தில் கடந்த 2015 முதல் 2018வரை பணிபுரிந்தேன். எதிரி மீது எந்த குற்ற வழக்கும் கிடையாது வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். விசாரித்ததில் ஐந்து நிமிடத்தில் எதிரியை பற்றி தெரிந்துகொண்டேன். புகாரை 04.04.2017ம் தேதி 16.30 மணிக்கு கொடுத்தேன். நான் கொடுத்த புகாரை 04.03.2017 ம் தேதி 16.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் பெற்று வழக்கு பதிவு செய்துள்ளதாக எனது புகாரின் அடியில் சார்பு ஆய்வாளரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதைபோல் எனது 161 Cr.p.c வாக்குமூலத்தில் 04.03.2017 ம் தேதி 16.30 மணிக்கு புகார்கொடுத்தேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களில் தட்டச்சு பிழை மாதிரியோ திருத்தம் செய்தது போலவோ ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. மேற்படி தட்டச்சு பிழை உள்ளது என்று நீதிமன்றத்திற்கு கடிதம் எதுவும் அனுப்பியுள்ளோமா என்றால் இல்லை. எதிரி நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் 04.04.2017 ம் தேதி மாலை 4.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு வரவே இல்லை என்றும், கடந்த 04.03.2017ம் தேதியன்று எதிரி காவல்நிலையம் வந்து தங்களிடம் No Criminal case certificate அவருக்காக கேட்டுள்ளார் என்றும், அவரை ஒருமையில் நான் பேசி அனுப்பியுள்ளேன் என்றும், காவல் துறை என்றால் பொதுமக்களுக்கு தான்

இருக்கிறது என்று சொன்ன எதிரி போய்விட்டார் என்றும், இதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதனால் கோபமடைந்த நான் எதிரியின் பெயர் மற்றும் சம்பவ நாளையும், நேரத்தை நிரப்பாமல் விட்டுவிட்டு எதிரியை ஒரு மாதம் கழித்து நேரடியாக பார்த்த தாங்கள் 04.04.2017ம் தேதியன்று குற்ற வழக்கு இல்லை என்ற சான்றிதழ் தருவதாக எதிரியை காவல் நிலையத்திற்கு வரவழைத்து அவசரகதியில் ஏற்கனவே எழுதப்பட்ட புகாரை நான் நிரப்பி எதிரியின் மீது புகார் கொடுத்ததில் நானும் எனக்காக மற்ற காவலரும் ஆதரவாக செயல்பட்டு இயந்திரரீதியாக செயல்பட்டு வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியுடன் ஆண்டவன் மகன் தங்கபாண்டியும் காவல்நிலையம் வந்தார்கள் என்று எனது புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் மேற்படி தங்கபாண்டி காவல்நிலையத்தில் இருந்தாரா என்றால் இல்லை. தங்கபாண்டியின் எந்த குற்ற வழக்கு எண் சம்பந்தமாக எதிரி காவல் நிலையம் வந்தார் என்று எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரியை கைது செய்து நிலையத்திற்கு கொண்டு வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் நிலையம் கொண்டு வந்த பிறகு தெரியும். எதிரியை கைது செய்த காரணத்தை சார்பு ஆய்வாளர் எதிரியிடம் தெரிவித்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி ஆபாசமாக பேசியதால் மற்றவர்கள் முகம்சுழிக்கும் அளவில் அது இருந்தது என்று எனது புகாரிலும் எனது விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி தயார் செய்த விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் கட்டிட வேலை நடந்து வருவதுபோல் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி எங்களை ஆபாசமாக திட்டவும் இல்லை பணி செய்யவிடாமல்

தடுக்கவும் இல்லை என்றாலும் நான் சொல்வது போல் எதிரி கொலை மிரட்டல்விடுக்கவில்லை என்றாலும் எதிரியின் மீது ஒரு மாதத்திற்கு முன்பு இருந்த கோபத்தால் எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 80/2018**

**Deposition of Witness for PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குழந்தைவேல் | Caste | : | |
| Father/Husband Name | : | சுப்பிரமணியன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( Accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.03.2026**

**முதல் விசாரணை** :

நான் தற்போது எழுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் டி.இராமநாதபுரம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராகப் பணிபுரிந்தேன். கடந்த 04.04.2017ம் தேதி சுமார் 16.00 மணியளவில் நான் CCTNS பணியில் காவல்நிலையத்தில் இருந்தேன். அ.சா.1 குமாரராஜா எழுத்தராக பணியில் இருந்தார். சாட்சி காவலர் சுகுமாறன் பாரா காவலில் இருந்தார். பின்னர் பெயர் விலாசம் தெரிந்த செல்லையாபுரத்தை சேர்ந்த சின்ன அழகன் மகன் முருகன் என்பவர் நிலையம் வந்து தனது உறவினரான கடவுள் மகன் தங்கபாண்டி என்பவர் காவல் நிலையத்தில் நிபந்தனை ஜாமீனில் கையெழுத்து போட்டு வருகிறார் என்றும், இரண்டு நாட்கள் அவருக்கு முக்கியமான வேலை இருக்கிறது என்றும், இதுசம்பந்தமாக விலக்கு அளிக்க வேண்டும் என்னிடம் கேட்டார். அதற்கு அ.சா.1 இது நீதிமன்ற உத்தரவு என்பதால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார். இதை கேட்ட மேற்படி நபர் நிலையத்திற்கு வேலை சென்று

நிலையத்தின் முன்பு நின்று கொண்டு ஏண்டா போலீஸ்கார தேவடியா மகன்களா நீங்கயெல்லாம் என்னடா வேலை பார்க்கிறீர்கள் உங்களை மாதிரி கேவலமாக நான் ராணுவத்தில் வேலை பார்க்களடா என்று சத்தம் போட்டார். அ.சா.1 வெளியே சென்று அவரை கண்டித்தார். அப்போது அ.சா.1ன்னை பார்த்து நீ ஏண்டா சொல்லுற என்று மீண்டும் மீண்டும் அசிங்கமாக பேசினார். அதற்கு அ.சா.1 எனக்கு வேலை இருக்கிறது இந்த இடத்தை விட்டு நீங்கள் போகுமாறு எதிரியிடம் சொன்னார். நீயெல்லாம் ஏண்டா வேலை பாக்குற கடமையில் எங்களை விட நீ பெரியாள என்று பேசினார். அப்போது பணியில் இருந்த நானும் மற்றும் நிலைய பாராவில் இருந்த தலைமை காவலர் சுகுமாறன் அவர்களும் வந்து எதிரியை பார்த்து அசிங்கமாக பேசாதீங்க இராணுவகாரர் மாதிரி நடந்துகொள்ளுங்கள் என்று கூறினோம். அதற்கு மேற்படி முருகன் எங்களை பார்த்து வாங்கடா அவுசாரி பயலுங்களா நீ போலீஸ்காரர்கள் தான நீங்க இந்த மிலிட்டரிகாரனை பிடிச்சுபாருங்கள் என்று சொல்லி அருகில் கட்டிட வேலை பார்த்த இடத்தில் இருந்த சென்ட்ரீங் கம்பியை எடுத்து என்னை தொட்டால் உங்களை கொல்லாமல்விடமாட்டேன் என்று எங்களை மிரட்டினார். நாங்கள் அவரை பிடிக்க சென்ற போது மேற்படி கம்பியை துாக்கி எறிந்துவிட்டு அங்கிருந்து அவர் ஓடிவிட்டார். பின்னர் அ.சா.1 இதுசம்பந்தமாக புகார் கொடுத்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1னும் நானும் சாட்சி சுகுமாறன் என்பவரும் சம்பவ சமயத்தில் டி.இராமநாதபுரம் காவல் நிலையத்தில் வேலை பார்த்து வந்ததோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்பு எதிரியின் பெயரி விலாசத்தை எப்போது தெரிந்துக்கொண்டோம் என்றால் அரைமணி நேரம்

கழித்து தெரிந்துகொண்டோம். அரை மணி நேரம் கழித்து அ.சா.1புகார் கொடுத்தார் என்றால் சரிதான். கடவுள் மகன் தங்கபாண்டியை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி தங்கபாண்டியின் மீது எந்த வழக்கும் இல்லை என்றாலும் எதற்காகவும் அவர் கையெழுத்து போட வரவில்லை என்றாலும் அவ்வாறு உண்மையாக இருந்திருந்தால் எனது வாக்குமூலத்தில் மேற்படி வழக்கு விபரங்களை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி மேற்படி தங்கபாண்டிக்காக எங்கு வந்த பேசினார் என்றால் காவல் நிலையத்திற்கு உள்ளே வந்து பேசினார். எதிரி காவல் நிலையத்திலிருந்து 50 மீட்டருக்கு அப்பால் வேறோருவருடன் பேசி கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. சம்பவம் காவல்நிலையத்தில் இருந்து 50 மீட்டர்அப்பால் நடந்தது என்று சொல்வது தவறு என்றால் சம்பவம் காவல்நிலையத்திற்கு உள்ளேயும் நடந்து வெளியேயும் நடந்தது. எதிரி பேசியவுடன் நானும் தலைமை காவலர் சுகுமாறனும் உடனே சென்றுவிட்டோம் என்றால் சரிதான். நான் பேசிய பின்பு தான் தலைமைகாவலர் வந்தார் என்றால் சரியல்ல நாங்கள் இருவரும் சேர்ந்து சென்றோம். முதலில் அ.சா.1 சென்றார் அதன்பின்பு நாங்கள் சென்றோம். நாங்களும் எதிரிகளும் 5 அடி தூரத்தில் நின்று பேசி கொண்டிருந்தோம். சம்பவ இடத்தில் பொதுமக்களோ வேறு நபர்களோ இல்லை என்றால் சரிதான். புகார்தாரர் எதிரியை விரட்டி சென்றார் என்றாலும் அதனால் தான் வாக்குவாதம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நாங்கள் எதிரி புகார்தாரருடன் பேசி கொண்டிருக்கும்போது சென்றோம். நாங்கள் இருவரும் சத்தம் கேட்டு தான் அங்கு சென்றோம் என்று வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். நாங்கள் வந்தவுடன் எதிரி ஓடிவிட்டார் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கம்பியை காட்டி மிரட்டியதாக சொன்னதற்கு மேற்படி கம்பியின் நிறம், நீளம் , அளவு

ஆகியவை எனது வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரி நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் 04.04.2017 ம் தேதி மாலை 4.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு வரவே இல்லை என்றும், கடந்த 04.03.2017ம் தேதியன்று எதிரி காவல்நிலையம் வந்து அ.சா.1யிடம் No Criminal case certificate அவருக்காக கேட்டுள்ளார் என்றும், அவரை ஒருமையில் அ.சா.1 பேசி அனுப்பியுள்ளார் என்றும், காவல் துறை என்றால் பொதுமக்களுக்கு தான் இருக்கிறது என்று சொன்ன எதிரி போய்விட்டார் என்றும், இதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதனால் கோபமடைந்த அ.சா.1 எதிரியின் பெயர் மற்றும் சம்பவ நாளையும், நேரத்தை நிரப்பாமல் விட்டுவிட்டு எதிரியை ஒரு மாதம் கழித்து நேரடியாக பார்த்த அ.சா.1 04.04.2017ம் தேதியன்று குற்ற வழக்கு இல்லை என்ற சான்றிதழ் தருவதாக எதிரியை காவல் நிலையத்திற்கு வரவழைத்து அவசரகதியில் ஏற்கனவே எழுதப்பட்ட புகாரை அ.சா.1 நிரப்பி எதிரியின் மீது புகார் கொடுத்ததில் அ.சா.1ற்காக நானும் தலைமை காவலர் சுகுமாறனும் அவருக்கு ஆதரவாக செயல்பட்டு இயந்திரரீதியாக செயல்பட்டு வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியுடன் ஆண்டவன் மகன் தங்கபாண்டியும் காவல்நிலையம் வந்தார்கள் என்று அ.சா.1ன் புகாரிலும் எனது வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் மேற்படி தங்கபாண்டி காவல்நிலையத்தில் இருந்தாரா என்றால் இல்லை. தங்கபாண்டியின் எந்த குற்ற வழக்கு எண் சம்பந்தமாக எதிரி காவல் நிலையம் வந்தார் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி தங்கபாண்டிக்கு ஆதரவாக உண்மையிலேயே எதிரி சிபாரிசு செய்திருந்தால் மேற்படி எதிரியிடன் தங்கபாண்டியும் காவல்நிலையத்திற்கு வந்திருப்பார் என்றும், வழக்கிற்காக பொய்யாகசாட்சியமளிக்கிறேன்

என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் தலைமை காவலர் சுகுமாறன்,நான் ஆகியோர் சம்பவம் நடந்த போது காவல்நிலையத்தில் தான் இருந்தோம் என்றால் சரிதான். மேற்படி நபர்களும் விசாரணை அதிகாரியும் சேர்ந்து அனைத்து ஆவணங்களையும் பொய்யாக காவல்நிலையத்தில்வைத்து எதிரிக்கு எதிராக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்து நிலையத்திற்கு கொண்டு வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் நிலையம் கொண்டு வந்த பிறகு தெரியும். எதிரியை கைது செய்த காரணத்தை சார்பு ஆய்வாளர் எதிரியிடம் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். கைது குறிப்பாணையில் கைதுக்கான காரணத்தை எதிரிக்கு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஆபாசமாக பேசியதாக சொன்ன இடம் பொதுஇடமோ மற்றும் பொதுமக்கள் அதிக நபர்கள் இருந்தஇடமோ இல்லை என்றால் சரிதான். அதுபோல் மற்றவர்கள் முகம்சுழிக்கும் அளவில் அது இருந்தது என்று எனது விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி தயார் செய்த விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் கட்டிட வேலை நடந்து வருவதுபோல் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி எங்களை ஆபாசமாக திட்டவும் இல்லை பணி செய்யவிடாமல் தடுக்கவும் இல்லை என்றாலும் நான் சொல்வது போல் எதிரி கொலை மிரட்டல்விடுக்கவில்லை என்றாலும் புகார்தாரர் என்னுடன் பணிபுரிபவர் என்பதால் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் எங்களது அரசுபணியை தடுக்கும்அளவில் எதிரி எந்த செயலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.